


# "எனக்கு ஒரு பதில் கிடைக்கும் வரை நான் இங்கேயே இருப்பேன்"

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருடைய தமிழ் உறவுகளினால் முன்னெடுக்கப்படுகின்ற எதிர்ப்பு போராட்டங்கள்

*சுவிஸ்லாந்து, அச்சுறுத்தபட்ட மக்களுக்கான சமூக அமைப்பின் குறும் அறிக்கை (STP)*

## முன்னுரை

இலங்கையானது இருபத்து ஆறு வருடங்களாக ஒரு நீண்டகால உள்நாட்டு யுத்தம் காரணமாக ஒரு பாரிய அளவில்லான இழப்புக்களையும் மற்றும் கசப்பான அனுபவத்தையும் அனுபவித்து வந்தது. இலங்கை தீவின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் தமிழர்களுக்கு என தனி ஒரு தேசியத்தை (a separate Tamil state) முன்வைத்து இடம்பெற்ற போரானது இரண்டாயிரத்து ஒன்பதாம் ஆண்டில் கொடூராமன முறையில் இலங்கை அரசினுடைய இராணுவ படையினரினால் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. இந்த போரின் காரணமாக பத்தாயிரத்துக்கும் மேற்ப்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர், மில்லியக் கணக்கான மக்கள் புலம்பெயர்தனர்.[1] இரண்டு தரப்பினரும் போர்க்குற்றங்களையும் மற்றும் மனித மாண்பிற்கு எதிரான குற்றங்களையும் புரிந்துள்ளனர் என சொல்லப்படுகின்றது.[2] இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டு தை மாதம், இலங்கையின் அதிபராக பதவிவகித்த, மஹிந்த ராஜபக்', தன்னுடைய ஆட்சியின் கீழ் நாட்டை வழிநடத்தினார், இவருடைய வழிநடத்தலில் நாட்டில் மனிதநேயம் (மனித மாண்பு) பாரியளவில் பதிக்கப்படும் சூழ்நிலை உருவாகியது, இதன் காரணமாக மைத்திரி-பாலசிறிசேனாவினால் ஜனாதிபதி தேர்தலில் மஹிந்த ராஜபக்' தோற்க்கடிக்கபட்டார்.[3] புதிய ஜனாதிபதி முன்பிருந்த அரசாங்கத்தின் அதிகாரவர்க்கத்துக்குள் இருந்தவரும் மற்றும் முன்னிருந்த அரசாங்கத்தின் மனிதநேயமற்ற கொடூரமான ஆட்சிமுறைமையினையும் மற்றும் அதிகாரவர்க்க அடக்கு முறைமையினையும் கொண்ட செயற்பாடுகளையும் கண்டு கொதித்துபோய் தான் அங்கம் வகித்த பதவியையும் விட்டுவிட்டு வெளியேற-ியவரும் ஆவார். எவ்வாறாயினும், இந்த நடவடிக்கையானது இலங்கையில் காணப்படுகின்ற மிகவும் மோசமான மனித உரிமைகள் மீறல் நிலைமைகளை மாற்றி அமைத்ததாக குறிப்பிட முடியாது (However, it has not significantly ameliorated the human rights situation). இலங்கையை பொறுத்தவரையில் தடுப்புக்காவலில் அடைத்து வைக்கபட்டிருக்கும் கைதிகளை சித்திரவதை செய்வது, சட்டத்துக்கு முரணான முறையில் துன்புறுத்துவது, எந்தவொரு காரணமுமின்றி கைதுசெய்தல், தடுப்புகாவலில் வைத்திருத்தல், கண்காணித்தல், சமூகநலன் விரும்பிகளை மற்றும் பத்திரிகையாளர்களை துன்புறுத்துவது என்பன இன்னமும் இலங்கையில் தொடர்ந்து கொண்டிருப்பது ஒரு பொதுவான விடயமே.[4]

---

[1] Cf. https://www.theguardian.com/world/2014/mar/27/un-step-sri-lanka-war-crimes-inquiry (19.08.2017).

[2] Cf. மனித உரிமைகள் கவுன்சில் (HRC): இலங்கை மீதான OHCHR புலனாய்வு அறிக்கை (OISL), 2015 (அணுகல் : http://www.ohchr.org/EN/HRBodies/HRC/Pages/OISL.aspx (08.08.2017)).

[3] Cf. https://www.news.lk/news/sri-lanka/item/5620-presidential-election-2015-final-results (19.08.2017).

[4] Cf. சர்வதேச உண்மை மற்றும் நீதிகான திட்டம்மிடல் இலங்கை (ITJPSL) 2017: நிறுத்தபடாத : 2016/17 இலங்கையில் இடம்பெறும் சித்திரவதை. / ஒக்லாண்ட் நிறுவனம் 2016: வீட்டுக்குத் திரும்புவதற்கு காத்திருக்கின்ற: போருக்குப் பிந்திய இலங்கையில் தொடரும் புலம்பெயர்ந்த மக்களின் நிலைமை / அச்சுறுத்தபட்ட மக்களளுக்கான சங்கம் (STP) 2016: இராணுவத்தின் நிழலின் கீழ் / HRC 2017: இலங்கைமீதான மனித உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கை / HRC 2017 : சித்திரவதை மற்றும் பிற கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது சீரழிவான சிகிச்சை அல்லது தண்டனையைப் பற்றிய சிறப்பு அறிக்கையாளரின் அறிக்கை இலங்கை தனது இலக்குகளை அடையும்போது

இலங்கையானது சர்வதேச சமூகத்துக்கு பல வாக்குறுதிகளை கொடுத்தபோதிலும், தற்போதுள்ள அரசங்கமானது நல்லிணக்க கோட்பாடுகளுக்கு முன்னுர- ிமையளித்தல் மற்றும் நிலைமாற்று நீதிக்கான செயல்பாடுகளை முன்னேடுத்தல் போன்ற வாக்குறுதிகளை சர்வதேச சமூகத்திற்கு கொடுத்தபோதிலும் அவற்றை தொடர்ந்து செய்வதற்க்கு அக்கறை எடுக்கவில்லை.[5] ஆயினும் தற்போதைய அரசங்கமானது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக ஒரு சிறிய அளவிலான அக்கறையை காட்டிவருகின்றது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.[6] இருந்த போதிலும் உலகிலேயே வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் அதிகூடுதலாக உள்ள நாடாக இலங்கை காணப்படுகின்றது.[7] ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பதாம் ஆண்டுகளிலிருந்து நூறாயிரத்திற்கும் அதிகமான மனிதர்கள் காணாமல் போயுள்ளனர் என மதிப்பீடுகள் கருதுகின்றன.[8] அரசாங்கம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக எந்தவொரு செயற்பாடுகளையும் எடுக்காததின் காரணமாக, தமிழ் பெண்கள், இரண்டாயிரத்து பதினேழாம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து கவனயீர்ப்பு மற்றும் எதிர்ப்பு போராட்டங்களில் ஈடுபட்டுக்கொண்டு வருகின்றனர். இவர்கள் இலங்கையின்னுடைய வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களில் சாலைமறியலில் ஈடுபடுவதன் ஊடாக தங்களின் எதிர்ப்புப் போரட்டங்களை முன்னேடுப்பது மட்டுமல்லாது, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் நீதி, உண்மை மற்றும் எவ்வாறு இந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர்க்கும் மற்றும் அவர்களின் உறவுகளுக்கு இழைத்த தவறுகள் சீர்செய்யப்பட வேண்டும் என்கின்ற கோரிக்கைகளை முன்வைத்து தங்களின் போராட்டத்தினை தொடர்கின்றனர்.[9]

இந்த அறிக்கையின் நோக்கமானது தற்போது இலங்கையில் நடைபெற்றுக் கொண்டுள்ள தமிழ் பெண்களின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பிலான எதிர்ப்பு போரட்டங்களுக்கு என்ன காரணம் என்பதை உன்னிப்பாகக் அவதானிப்பதும், மாறும் இலங்கை அரசாங்கம் எவ்வாறு இந்த எதிர்ப்புப் போராட்டங்களுக்கு பதில் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது என்பதும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விவகாரங்களை மற்றும்

---

/ சர்வதேச நெருக்கடி குழு (ICG) 2017: இலங்கையின் உள்நாட்டு யுத்தமும் -அதில் பாதிக்கப்பட்ட பெண்களும்: யுத்தத்தின் மரபுரிமையை கையாள்வதில்.

[5] HRC 2017 / இலங்கைமீதான மனித உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கை/ HRC 2017 : இலங்கை தனது பணியை அடைகையில் நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்கள் சுதந்திரம் குறித்த விசேட அறிக்கையாளர் அறிக்கை .

[6] HRC 2017 / இலங்கைமீதான மனித உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கை/ HRC 2017 : இலங்கை தனது பணியை அடைகையில் நீதிபதிகள் மற்றும் வழக்கறிஞர்கள் சுதந்திரம் குறித்த விசேட அறிக்கையாளர் அறிக்கை .

[7] Cf. மனித உரிமைகள் கவுன்சில் 2015: பலவந்தமான அல்லது தன்னிச்சையற்ற காணாமல் போனோர்களுக்காக வேலைசெய்துவரும் குழுவினரின் அறிக்கை.

[8] Cf. சர்வதேச மன்னிப்புச் சபை (AI) 2017: நீதி மட்டுமே நம் காயங்களை குணப்படுத்த முடியும். இலங்கையில் காணாமல் போன குடும்பங்களின் கோரிக்கைகளை கவனித்தல்.

[9] கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் மருதங்கேணி ஆகிய இடங்களில் தொடர்ச்சியான ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

பிரச்சனைகளையும் உள்வாங்கியதாகும். அத்தோடு இந்த அறிக்கையானது இலங்கையில் எதிர்ப்பு போரட்டங்களை முன்னெடுத்துச் செல்கின்ற தமிழ் பெண்களை நேர்க்காணல் செய்ததின் ஊடாகவும் மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளும் மற்றும் எதிர்ப்பு போரட்டங்களில் ஈடுபட்ட பெண்களும் மேசை ஆராட்சி முறையில் நேர்காணும் போது வழங்கிய தரவுகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டதாகும். இந்த அறிக்கையில் உள் வாங்கப்பட்டுள்ள தரவுகள் மற்றும் தனிமனித அனுபவங்கள் அல்லது கதைகள் இலங்கையில் வாழ்ந்து கொண்டு இருக்கும் தனி ஒருவருடைய பிரச்சனையாக மட்டும் கருதி விடமுடியாது, மாறாக இந்த அறிக்கையில் உள்வாங்கப்படுள்ள சாட்சியங்கள் அல்லது நேர்காணும்போது பெற்ற தரவுகள் இன்மும் இலங்கையில் ‘அசுத்தமான கலாச்சார முறைமைகள;’ அல்லது ‘கலாச்சார சீர்கேடுகள்’ பாரியளவில் தொடர்ச்சியாக அரங்கேற்றம் செய்யபடுகொண்டே உள்ளது. STP க்கு தகவல்கள் அளித்தவர்களின் பாதுகாப்பு கருதி அவரிகளின் பெயர்விபரம் பின்னர் குறிப்பிடபடும்.[10]

[10] STP க்கு பெயர்கள் தெரியும்.

## இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர்: ஒரு நீண்ட பாரம்பரியம்

இலங்கை அரசாங்கத்தை பற்றி விமர்சிப்போரை வலிந்து காணாமல் ஆக்குவது என்பது இலங்கையில் நீண்டகாலமாகவும் மற்றும் பாரம்பரியமாகவும் இடம்பெறும் விடையமாகும். ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுவதாம் ஆண்டிற்கும் மற்றும் ஆயிரத்து தொள்ளாயிரத்து எண்பதாம் ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இலங்கையில் மார்க்சிஸ்ட் புரட்சி "மக்கள் விடுதலை முன்னணி" (JVP) வெடித்த காலப்பகுதியில் முற்பது ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆனால் அறுபது ஆயிரத்துக்கு உட்பட்ட சிங்கள மாணவர்கள் கொல்லப்பட்டார்கள் அல்லது காணமல் ஆக்கப்பட்டர்கள் அப்போது இருந்த அரசாங்கத்தினால்.[11] இலங்கை இராணுவத்திற்கும் மற்றும் தமிழ் ஈழ விடுதலைப்புலிகளுக்கும் (LTTE) இடையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தின் போது, யாரெல்லாம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுடன் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தொடர்பு கொண்டிருந்தனரோ அவர்களும், சிங்கள மற்றும் முஸ்லிம் விமர்சகர்கள் யா-ரெல்லாம் இலங்கை அரசாங்கத்தின் ஆட்சி முறைமையில் ஏற்பட்ட தவறுகளை சுட்டிக்காட்டினார்களோ அவர்களும் காணாமல் ஆக்கப்பட்டனர்.[12] இலங்கை இராணுவப்படையினர்கள் தான் நேரடியாக இந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் விடையத்தில் சம்மந்தப்பட்டுள்ளனர் என மிக அதிக அளவிலான பத்திர வடிவில் பதிவாகயுள்ள வலிந்து காணாமல் ஆக்கபட்டோருடைய வழக்குகள் தெட்ட தெளிவாக சுட்டிக்காட்டுகின்றது.[13] யுத்தத்தின் முடிவில் யாரெல்லாம் இலங்கை இராணுவத்திடம் சரணடைந்தார்களோ அவர்களைப் பற்றிய எந்தவொரு அடையாளமும் இல்லை. இவ்வாறு யுத்தத்தின் முடிவில் 146 679 அப்பாவி மக்களின் மரணத்திற்கும் மற்றும் இழப்பிற்கும் எந்தவொரு முடிவும் இன்னும் கிடைக்கவில்லை.[14]

இலங்கையை பொறுத்தவரையில் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின்பும் வலிந்து காணாமல் ஆக்கப்படும் நடவடிக்கைகள் இன்னமும் முடிவுக்கு கொண்டுவரப்படவில்லை. ஆகவே வலிந்து காணாமல் ஆக்கப்படும் நடவடிக்கைகள் இன்னும் தொடர்வதற்கு காரணம் இது ஒரு அரசியல் தந்திரோபாயமாக அல்லது அரசியல் கருவியாக இலங்கை கையாள்கின்றது என கருதப்படுகிறது.[15] முன்னாள் இலங்கை அதிபர் மகிந்தராஜபக்'வின், எண்ணற்ற

[11] Cf. ஏ.ஐ.ஆர் 1990: இலங்கை: Extrajudicial Executions, 'காணாமல் போனவர்கள்' மற்றும் சித்திரவதை, 1987 முதல் 1990 வரை / FeizalSamath 2001 : ஸ்ரீலங்கா, புதிய ஆட்சியாளர்களிடமும் காணபடுகின்ற கடந்த காலத்தில் கண்டுனர்ந்த விடையங்கள். (http://www.infolanka.com/ubb/Forum1/HTML/005444.html (08.08.2017)).

[12] Cf. மனித உரிமைகள் கவுன்சில் (HRC): இலங்கை மீதான OHCHR புலனாய்வு அறிக்கை (OISL), 2015.

[13] Cf. என்றார். / மனித உரிமைகள் கண்காணிப்புக் குழு (HRW) 2008: நைட்மேர்: இலங்கையில் 'காணாமல் போதல்' மற்றும் கடத்தல்களுக்கான அரச பொறுப்பு / AI 2017: நீதி மட்டுமே நம் காயங்களை குணப்படுத்த முடியும். இலங்கையில் காணாமல் போன குடும்பங்களின் கோரிக்கைகளை கவனித்தல்.

[14] Cf. மன்னார் மறைமாவட்டம் 2011: கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு மன்னார் கத்தோலிக்க மறைமாவட்டத்தின் சமர்ப்பிப்பு.

[15] Cf. ITJPSL 2017: தடுத்து நிறுத்தப்படாத: மாநில சித்திரவதை & பாலியல் வன்முறை 2016/17.

அரசியல் எதிரிகள் மட்டுமல்லாது மனித உரிமை ஊழியர்கள் மற்றும் அரசுசாரா ஊழியர்கள், பத்திரிகையாளர்கள் ஏன் பொதுமக்கள் கூட காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.[16] இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டில் அரசாங்க மாற்றம் ஏற்படும்வரை, எண்ணற்ற ஏயனூடாக ஆட்களை கடத்துதல் மிகவும் பரவலாக இடம்பெற்றது, இந்த ஆட்கடத்தலுக்கு வெள்ளை Van என அவர்கள் பெயரிட்டார்கள்.[17] சிறிசேனா மனித உரிமைகள் தொடர்பாக சில முன்னேற்றங்களைச் செய்திருந்தாலும், இன்னமும் கடத்தல்கள் இடம்பெறுவது பதிவாகிக்கொண்டே இருக்கிறது (Although Sirisena has made some selective improvement regarding human rights, there are still reports of abductions).[18] ஜஸ்மின் சூகோ "சர்வதேச உண்மைக்கும் மற்றும் நீதிக்கும்மான செயல்திட்டம;" ("International Truth and Justice Project" (ITJP)) நிர்வாக இயக்குனர் கருத்து தெரிவிக்கையில் கூறி இருந்தார்: வெள்ளை Van – ஆட்கடத்துதல் சம்பவம் கடந்த காலங்களில் இருந்ததுபோல் இன்னமும் தொடர்ச்சியாக புதிதாக வந்த அரசாங்கத்தின் கீழும் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் ஒரு குற்றமாகும் பாரப்பதற்கு இது அதிர்ச்சியான ஒரு விடயமாகும், இதனை புரிந்துகொண்டோர் அல்லது அறிந்த்துகொண்டோர் மீண்டும் உறுதியாக கூறும்பொதுகூட அவர்கள் இதை பொறுப்பு ஏற்கமாட்டார்கள் (The executive director of the "International Truth and Justice Project", Yasmin Sooka, commented: "It is hardly surprising that Sri Lanka's white van abductions continue as those in charge of past system crimes have been promoted and rewarded by this Government, which reassures perpetrators that they will never be held accountable."[19] ). மேலும் பயங்கரவாத தடுப்பு சட்டமானது (PTA) மிகவும் கடுமையாக இலங்கையில் இன்னமும் கடைப்பிடிக்கப்படுவதால் இது இன்னமும் வலிந்து காணாமல் ஆக்கப்படும் நடவடிக்கைகளுக்கு இலங்கையில் காணப்படுவதற்கு உந்துகோலாகவும் அமைந்துள்ளது (Further, the draconian "Prevention of Terrorism Act" (PTA), which is also considered as a motor for enforced disappearances,is still in force). இலங்கை பயங்கரவாத தடை சட்டத்தின் ஒரு வரைபு (CTA) , பயங்கரவாத தடுப்பு சடத்தினை (PTA) நடைமுறைக்கு கொண்டு வருவதற்கு இடமளித்துள்ளது (CTA) ஆனது PTA ஆக மாற்றி அமைக்கபட்டுள்ளது), இது மக்கள் மத்தியில் அச்சத்தினை அதிகரித்துள்ளது மட்டுமல்லாது, இந்த புதிய சட்டமானது உதவியாக இருக்கின்றது வலிந்து காணாமல் ஆக்கப்படுவோரின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்கும் மற்றும் அவர்களை துன்புறுத்தவும் உறுதுணையாக அமைந்துள்ளது.[20]

---

[16] Cf. HRC 2015: இலங்கை மீதான OHCHR புலனாய்வு அறிக்கை (OISL).

[17] Cf. https://www.nzz.ch/international/asien-und-pazifik/vergangenheitsbewaeltigung-in-sri-lanka-ein-schrittchen-hin-zur-aussoehnung-ld.110748 (19.08.2017).

[18] Cf. HRC 2017: இலங்கையில் மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கை.

[19] பார்க்க http://www.tamilguardian.com/content/torture-tamils-sri-lanka-continues-2017-itjp (10.8.2017).

[20] Cf. http://www.thehindu.com/news/international/Draft-of-new-counter-terror-law-triggers-old-fears-in-Sri-Lanka/article16082401.ece (19.08.2017).

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரை கையாளும் முறை

இரண்டாயிரத்து பதினாறாம் ஆண்டு புரட்டாதி மாதம் இலங்கையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சம்மந்தமான வழக்குகளை விசாரணை செய்வதற்கு பாராளுமன்றத்தில் "காணாமல் போனோர் அலுவலகம;" (OMP) அமைப்பதற்கு ஒரு மசோதாவை நிறைவேற்றியது.[21] ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்றுரொராம் ஆண்டு முதல் இலங்கை அரசங்கமானது (GoSL) நீண்ட உள்நாட்டு கமிஸன்களை நிறுவியுள்ளது.[22] இதுவரை, காணாமல் போன நபர்களின் வழக்குகளை முறையாக விசாரிக்க தவறிய பொறுப்பான நபர்களை நீதிமன்றத்துக்கு கொண்டு வருதல் மற்றும் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு உண்மை மற்றும் இழப்பிற்கான உரிமை ஆகியவற்றை உறுதிப்படுத்துதல் நடைமுறை படுத்தப்பட வேண்டிய விடயமாகும். இரண்டாயிரத்து பதின்மூன்றாம் ஆண்டு ஜனாதிபதி ராஜபக' ("பரணகம ஆணைக்குழு") என்று அழைக்கப்படும; "கடத்தல்கள் மற்றும் காணாமற் போன புகார்களை விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு" ஒன்றினை நிறுவினார்.[23] இருந்த போதிலும், இந்த ஆணைகுழுவினை இரண்டாயிரத்து பதினாறாம் ஆண்டு கலைப்பதற்கு முன்பு இந்த ஆணை குழுவானது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான புகார்களை விசாரணை செய்வதிலும் மற்றும் அதனோடு தொடர்புடைய குற்றவாளிகளை கண்டுபிடிக்கவும் தாங்கள் எடுத்த முயற்சிகளில் முன்னேற்றம் காண தவறிவிட்டனர். ஆனால் இதற்கு மாறாக அவர்களின் அமைப்பினில் இருந்த குறைபாடுகள், அவர்களின் அமைப்புக்கு போதிய சுதந்திரம் இல்லாமை, கலந்துரையாடலுக்கான சுதந்திரம் இல்லாமை சர்வதேச நிபுணர்கள் மற்றும் காணாமல் போனவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் அக்கறை காட்டாமை மற்றும் துன்புறுத்தப்பட்டவர்கள் அதற்கான சாட்சியங்களை இந்த ஆணைக்குழுவுக்கு வழங்காமை என்பன குறைபாடுகளாக கூறப்பட்டது.[24] இவ்வாறான குறைபாடுகள் இருந்த போதிலும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் இருபத்தினான்கு ஆயிரம் பேர் இந்த "பரணகம ஆணைகுழுவினில்" ("Presidential Commission of Inquiry into Complaints of Abductions and Disappearances") புகார்களை தாக்குதல் செய்தனர்.[25] அறுபத்தையாயிரம் புகார்கள் ஆயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று நான்காம் ஆண்டு முதல் "தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம;" (ONUR) வில் பதிவாகி உள்ளது.[26] "செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேச குழு" (ICRC) 16,000 புகார்களை பதிவு செய்தது.[27]

---

[21] Cf. http://www.tamilguardian.com/content/president-sirisena-must-not-delay-upholding-his-promises-protesting-families-disappeared-any (08.08.2017).

[22] AI 2009: இருபது வருடங்கள் நம்பிக்கை கொள்ளுங்கள். விசாரணையின் இலங்கைக் கமிஷன்.

[23] Cf. AI 2017: நீதி மட்டுமே நம் காயங்களை குணப்படுத்த முடியும்.

[24] Cf. கொள்கை மாற்றீட்டு மையம் (CPA) 2014: காணாமற் போனவர்களைப் பற்றி புகார் தெரிவிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு. போக்குகள், நடைமுறைகள் மற்றும் தாக்கங்கள். ஒரு விமர்சனம்.

[25] Cf. https://www.srilankacampaign.org/paranagama-commission-done-great-damage-now-damage-must-repaired/ (14.8.2017).

[26] Cf. http://in.reuters.com/article/sri-lanka-rights-idINKCN0YU277 (14.8.2017).

[27] Cf. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் (ICRC) 2016: நிச்சயமற்ற வாழ்வு.

இரண்டாயிரத்து பதினாறும் ஆண்டில் மே மாதத்தில் இலங்கையானது "வலிந்து காணாமல் ஆக்கப்படுவதில் இருந்தது அனைவரினையும் பாதுகாத்தல் என்கின்ற சர்வதேச மாநாட்டிற்கு" ["International Convention for the Protection of All Persons from Enforced Disappearance"] ஒப்புதல் அழித்தது மற்றும் "ஆகஸ்ட் 2016 ல் பாராளுமன்றம் OMP ஐ நிறுவுவதற்கு ஒரு மசோதாவை நிறைவேற்றியது.[28] இருப்பினும், ஆயிரத்து தொளாயிரத்து பதினேழாம் ஆண்டு ஆவணி மாதம் வரை இலங்கையின் தேசிய சட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்படுவதை ஒரு சட்டவிரோதமான செயற்பாடாக அங்கிகரிக்க எந்த ஒரு சட்டரீதியிலான அணுகு முறைகளும் மேற்கொள்ளப்படவில்லை.[29] அதே வேளை OMP ஸ்தாபிப்பதற்கு தாமதமாகிவிட்டது. பாராளுமன்றத்தில் OMP ஸ்தாபிப்பதற்கு முடிவு எடுக்கபட்ட போதும் கிட்டத்தட்ட ஒரு வருடத்திற்கு பின்னரே 2017 ஜூலை 20 ம் திகதி ஜனாதிபதி சிறிசேன OMP ஸ்தாபிப்பதற்கான நடவடிக்கையில் கை-யெழுத்திட்டார்.[30] OMP கான மசோதா கடுமையான விமர்சனத்திற்கு உள்ளாகிறது, ஏனென்றால் இந்த மசோதாவானது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் மற்றும் தேசிய சமூகத்துடன் கலந்தது ஆலே-ாசிக்கப்படவில்லை என்பதாகும். ருக்கி பெர்னாண்டோ என்பவர், இலங்கை மனித உரிமை சங்கத்தின் மிகவும் முக்கியமான மற்றும் தன்னார்வமிக்க பண்ணியாளர் ஆவார், அழுத்தமாக வலியுறுத்தி கூறுகின்றார் "that "the lack of information and documentation about the OMP... seriously hampers meaningful submissions, consultations and ultimately ownership and confidence in the OMP." [31]

அத்தோடு கூட அரச பிரதிநிதிகளின் கூற்றுகளில் இருந்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் மீது அரசாங்கத்திற்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் புகார்களை அக்கறையோடு விசாரணை செய்வதற்கு விருப்பம் இல்லையென்பது தெட்டதெளிவாகிறது. உதாரணமாக, பிரதம மந்திரி ரணில் விக்ரமசிங்கின், இரகசிய தடுப்பு வசதிகளை மறுத்தார் மற்றும் காணாமற்போனோர் அனைவரும் இறந்தவர்களாகவோ அல்லது வெளிநாடுகளில் இருப்பவர்களாகவோ இருக்குமென தெரிவித்தனர்.[32] முன்னாள் வெளிவிவகார மந்திரி மங்கள சமரவீர, இந்த அறிக்கையை உறுதிப்படுத்தியதோடு விடுதலைப் புலிகளுடனான (LTTE) தொடர்பு கொண்டு இருந்தோர் தான் இந்த காணாமற்போனோர் இவர்கள் சட்டவிரோதமாக உள்நாட்டுப் போரின் கடைசி கட்டத்தின்போது நாட்டை விட்டு

---

[28] Cf. Adayaalam Center for Policy (ACPR) 2017: Issue Brief No. 2. காணாமல் போன குடும்பங்கள் மற்றும் OMP: முன்னோக்கி பாதை உள்ளது? (http://www.adayaalam.org/2017/05/09/issue-brief-no-2-families-of-the-disappeared-and-the-omp-is-there-a-path-forward/ (07.08.2017)).

[29] Cf. CPA 2017: நடைமுறையில் காணாமல் இருந்து அனைத்து நபர்கள் பாதுகாப்பு சர்வதேச மாநாட்டில் அடிப்படை கையேடு.

[30] Cf. http://www.ft.lk/article/630214/Www.aquavista.lk (14.8.2017).

[31] Cf. http://www.huffingtonpost.com/taylor-dibbert/examining-sri-lankas-offi_b_10148336.html (10.8.2017).

[32] Cf. http://www.ceylonews.com/2016/01/large-number-of-sri-lanka-missing-are-dead-ranil/ (07.08.2017) / http://www.tamilguardian.com/content/missing-have-%E2%80%98left-country-illegally%E2%80%99-claims-sri-lankan-pm (07.08.2017).

வெளியேறிவிட்டதாகவும் கூறி இருந்தார்.[33] இரகசிய தடுப்பு வசதிகள் இருப்பின், காணாமற் போனோர் அனைவரும் இறந்து போயிருப்பதாக தேசிய கூட்டுறவு பேச்சுவார்த்தை மற்றும் உத்தியோகபூர்வ மொழிகள் அமைச்சர் மனோகணேசன் நம்புவதாக கூறி இருக்கின்றார்.[34] முப்பது வருடங்களுக்கும் மேலாக, இலங்கை அரசாங்கமானது காணாமற்போன நபர்கள் மற்றும் காணாமற்போன ஆட்களை நிர்ணயிக்கவும், சாட்சிகளைப் பாதுகாக்கவும் மற்றும் குற்றவாளிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை நடத்தவும் தவறி விட்டது.[35]

[33] Cf. http://www.tamilguardian.com/content/missing-ltte-cadres-are-abroad-claims-foreign-minister (07.08.2017).
[34] Cf. https://www.usnews.com/news/best-countries/articles/2017-05-18/on-the-8-year-anniversary-of-civil-wars-end-sri-lankas-political-fate-looks-grim (10.8.2017).
[35] Cf. AI 2017: நீதி மட்டுமே நம் காயங்களை குணப்படுத்த முடியும்.








Relatives are?

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக தமிழ் தாய்மார்கள் வழங்கும் சாட்சியங்கள்

புகார் A: ”என் மகள் இன்னும் வாழ்கிறாள்!”
17 வயது நிரம்பிய பெண், மார்ச் 4, 2009இல் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டாள்.

இந்த பெண்ணானவள் ஆயிரக்கணக்கான மற்றவர்களை போன்று வடபகுதியில் உள்ள முள்ளிவாய்க்கால் போர் மண்டலத்தில் இருந்து மத்திய மாகாணத்தில் மாத்தளைக்கு அவளது தாயுடன் நடந்து கொண்டிருந்தார். இவ்வாறு பாதையில் போய்க்கொண்டு இருக்கும்போது நூற்றுக்கணக்கான சிறுவர்கள் ஒரு வாகனத்தினுள் இனம் தெரியாத நபர்களால் சீருடையில் இருக்கும் போது ஏற்றபட்டார்கள். இந்த பெண்ணின் தாய் கூறினார் ‘‘என்னுடைய மகளும் வலுக்கட்டாயமாக இந்த வாகனத்துக்குள் ஏற்றப்பட்டாள். நான் என் தைரியத்தை கூட்டி இன்னும்மொரு பெண்ணோடு அந்த ஏயகெ்குள் ஏறினேன். ஆனால் நானும் என்னோடு வானுக்குள் எறிய அந்த பெண்ணும் வெளியினில் வீசப்பட்டோம் சிறிது தூரம் அந்த வான்னூர்தி பயணித்தபின். அந்த தருணத்தில் இருந்து நான் என் மகளை ஒவ்வொரு நாளும் தேடுகின்றேன்.’’ அவரது தாய் ”செஞ்சிலுவைச் சங்கத்தின் சர்வதேசக் குழு” (ICRC) மற்றும் தேசிய மனித உரிமைகள் ஆணையத்திடம் புகார் செய்தார். ஆனால், ஒரு பதிலும் கிடைக்கவில்லை. அத்தோடு அந்த பெண்ணின் தாய் ஜோசப் முகாமில் 2012 ல் தன்னுடைய மகள் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டதை அறிக்கையிட்டிருந்தாள். ஐந்து நாட்களுக்குப் பிறகு, ஒரு போலீஸ் அதிகாரி அந்த பெண்ணினுடைய தாயின் வீட்டிர்க்கு வந்து அவளின் மகளின் நிழல் படத்தினை காட்டி சென்றார்.

அந்த பெண்ணின் 44 வயதான தாய் கூறினாள் ‘‘என் மகள் இன்னும் உயிருடன் இருக்கிறாள் என்று நான் நம்புகிறேன்” ஏன் என்றால் ஜனவரி 2015-ல் ஜனாதிபதி தேர்தலுக்கு முன் வழங்கப்பட்ட பிரச்சார பொருளில் அச்சிடப்பட்ட படமொன்றில் இந்த தாய் தன் மகளை கண்டாள். ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேனாவுக்கு அடுத்தபடியாக அவர் படத்தில் உள்ளார். அந்த பெண்ணினுடைய தாய் அரசாங்க அமைச்சர்கள் உட்பட பல்வேறு நபர்களுக்கு இது பற்றி கவனத்தை ஈர்த்தார் ஆனால் தன் மகளை கண்டுபிடிப்பதில் அவள் தோல்வியையே கண்டாள். ஆகஸ்ட் 2015 இல், அவரது தாயார் யாழ்ப்பாணத்தில் சிறிசேனாவை சந்தித்தார், அங்கு அவளுடைய மகள் பற்றி அவரிடம் கேட்டேன் என்றார். அதற்கு இந்த விடயத்தை கவனத்தில் எடுத்துக்கொள்வதாக அவர் உறுதியளித்தார். ஆயினும் எந்தவொரு முயற்சியும் எடுக்கப்படவில்லை அந்த பெண்ணை கண்டுபிடிப்பதற்கு. இப்போது, அந்த தாய் வவுனியாவில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்து வருகிறார் மற்றும் ஏற்கனவே ஜனவரி 2017 ல் ஒரு உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

புகார் B: ”நான் எல்லா வகையிலும்  முயற்சித்தேன், இனிமேல் என்னால் முடியாது”

18 வயது நிரம்பிய பெண், ஏப்ரல் 23, 2009 இல் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டாள்.

யுத்தத்தின் கடைசி கட்டத்தில் இந்த பெண் நோய்வாய்ப்பட்டார், அதன் பிறகு இவள் செஞ்சிலுவைச் சங்கத்தினால் ஒரு மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். இது பற்றி இந்த பெண்ணின் உறவினர்களிடம் அறிவிக்கப்பட்டது. செப்டம்பர் 2009 ல் ஒரு கடிதத்தின் வடிவத்தில் ஒரு ஒற்றையில் இன்னும் அவள் உயிர் வாழ்வதற்கான அடையாளம் அவரது தாயை அடைந்தது. அவளுடைய அம்மா சொன்னாள், ”என்னுடைய மகள் கடிதம் எழுதினாள்  நன்றாக இருக்கிறாள் கவலைப்படத் தேவையில்லை என்று மற்றும் விரைவில் மீண்டும் சந்திப்போம் என்று. ஆனால் நான் என்னும் என் மகளை பற்றி எந்த ஒரு தகவலும் பெறவில்லை.’’

அந்த பெண்ணின்னுடைய தாய் தேசிய மனித உரிமைகள் ஆணையகம், பரணகம ஆணைக்குழு மற்றும் ஐ.சி.ஆர்.சி. ல் முறைப்பாடு செய்துள்ளார். ஆயினும் இந்த தாயின் கேள்விகளுக்கு எந்தவொரு பதிலும் கிடைக்கவில்லை. தன் மகள் பற்றி எந்தவொரு பதிலும் கிடைக்காததினால், இந்த தாய் வலியை மட்டுமே எதிர்கொள்ளவில்லை, அத்தோடு  தன்னுடைய மகளுக்கு  என்ன நடந்தது எனும் நிச்சயமற்ற தன்மை உடன் வாழ்ந்து வருகின்றார். ”இப்போது நான் சோர்ந்துவிட்டேன், எல்லா வகையிலும்  முயற்சித்தேன், இனிமேல் என்னால் தேட முடியாது,”  என 65 வயதான அம்மா சொல்கிறார். இருப்பினும், முல்லைத்தீவில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் இந்த தாயார் பங்குபற்றுகிறார்.

புகார் C: ‘‘என்கொரு தீர்க்கமான பதில் கிடைக்கும் வரை நான் இரவும் பகலும் இங்கேயே இருப்பேன்’’

16 வயது நிரம்பிய ஆண், ஏப்ரல் 20, 2009 இல் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டான்.

யுத்தத்தின் கடைசி கட்டத்தின்போது இலங்கை இராணுவத்தின் குண்டு வீச்சு தாக்குதலுக்கு பின்னர்,  இவர் தனது குடும்பத்தை இழந்தார். இவருடைய குடும்பம் இலங்கை இராணுவத்தினரால் புல்மோட்டை முகாமிற்கு கொண்டுவரபட்டது. இவரின் தாய் கூறுகின்றார் ‘‘ எனது நண்பர்கள் கூறினார்கள் எனது மகன் என்னை தேடிக்கொண்டு இருந்ததாக. இருந்த போதிலும் அவர் எங்களிடம் வர பயந்து கொண்டு இருந்தார். அந்த தருணம் முதல் என் மகனை பற்றி எனக்கு எதுவும் தெரியாது’’

அவரது தாயார் தேசிய மனித உரிமைகள் ஆணையம், பரணகம ஆணைக்குழு மற்றும் ஐ.சி.ஆர்.சி ஆகியோருடன் புகார் செய்தார். ஆயினும் எந்தவொரு பதிலும் கிடைக்கவில்லை, இதன் காரணமாகத்தான் அவரது தாய் முல்லைத்தீவில் நடந்த எதிர்ப்பு போராடங்களி கலந்து கொள்ள முடிவு செய்துள்ளாள். என் மகனைக் கண்டுபிடிக்க விரும்புகிறேன். 44 வயதான அம்மா சொல்கிறார்: “நான் கடைசியாக ஒரு பதிலைக் கேட்கும் வரை இரவும் பகலும் தங்குவேன்”

<u>புகார் D: “நான் எனது மகனை திரும்பி அழைக்கும்போது, எனது மகன் மற்றொரு வரிசையில்தான் நின்று கொண்டிருந்தான்”</u>
23 வயது நிரம்பிய ஆண், மே 6, 2009 இல் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டான்.

யுத்தத்தின் முடிவில் அவர் மற்றும் அவரது குடும்பத்தினர் முள்ளிவாய்க்காலை விட்டு வெளியேறி, முகாமிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் யுத்த வலயத்தை விட்டு வெளியேறிக் கொண்டு இருக்கும்போது, ஒரு குண்டு வீச்சை சந்தித்தனர் அப்பொழுது அவருடைய குடும்பம் அவரை இழந்தது. அவருடைய தாய் கூறினாள் “அப்பொழுதிலிருந்து நாங்கள் அவரை காணவில்லை பின்னர் நாங்கள் முகாமிலிருந்து வெளியேறின பிறகு, எங்கும் அவரைத் தேடினோம்.” அவரது தாயார் தேசிய மனித உரிமைகள் ஆணையம், பரணகம ஆணைக்குழு மற்றும் ஐ.சி.ஆர்.சி ஆகியோருடன் புகார் செய்தார். அத்தோடு ஜோசப் முகாமில் 2012 ஆம் ஆண்டு அவரது மகன் காணாமற் போனதாக அவர் அறிவித்தார்.

தினசரி செய்தித்தாளில் “உதயன்” நான் என் மகனை காணவில்லை என அறிவித்து என் தொலைபேசி எண்ணையும் அறிவித்து உள்ளேன். 63 வயதான அம்மா சொல்கிறார். ஜூலை 2 அல்லது 3 அன்று, ஒருவர் என்னுடைய தொலைபேசிக்கு அழைப்பு ஒன்றினை மேற்கொண்டு சிங்களத்தில் பேசினார். ஆயினும் அந்த அழைப்பு துண்டிக்கப்ட்டது. மீண்டும் நான் அந்த தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பினை மேற்கொண்டபோது என்னுடைய மகன் பேசினார். அவர் சொன்னார் “நான் எங்கே என்று எனக்குத் தெரியவில்லை. என் கைகள் கட்டப்பட்டுள்ளன. அவர்கள் எனக்கு ஊசி கொடுக்கிறார்கள் என்றார்” என அவரின் தாய் குறிப்பிட்டார், இந்த தாய் மகன் உண்மையிலேயே தான் மகன்தானா என அறிய அவரின் சகோதரியைப்பற்றி விசாரித்தார் அதற்க்கு அவன் தன்னுடைய சகோதரி சுனாமியில் இறந்ததுவிட்டார் என கூறினான் அத்தோடு அந்தத் தாய் அழுதுவிட்டார். பின் தொலைபேசி அழைப்பானது துண்டிக்கப்பட்டது. அவரது தாயார் இந்த தொலைபேசி எண்ணிற்கு அழைப்பு ஏற்படுத்தினால் யாரையும் அடையமுடிவதில்லை. மார்ச் 7, 2012 இல், மருதங்கேணியிலுள்ள மற்ற மூன்று பெண்களுடன் ஆர்ப்பாட்டத்தை தொடங்கியுள்ளார், தனது மகனின் இருப்பிடம் பற்றிய தகவலைப் பெற்றுக் கொள்ளும்வரை எதிர்த்து போராட முடிவு செய்துள்ளார். அவர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு அவர்கள் பாதை ஓரத்தில் இரவில் தூங்குவதில்லை.

புகார் E: "நான் மிகவும் மகிழ்ந்தேன் , எங்கே அவள் என்று கேட்டேன்"

16 வயதுநிரம்பிய பெண், மே 20, 2009 இல் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டாள்.

மார்ச் மாதம் 2009இல் இவள் தனது பதினாறு வயதினில் விடுதலை புலிகளால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டாள். மே 20 ம் திகதி, அவர் இலங்கை இராணுவத்திடம் சரணடைந்தார் அதன் பின்னர், அவரை காணவில்லை. அவளின் தாயார்" உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களுக்கான" முகாமுக்கு கொண்டு வந்தனர். இலங்கை இராணுவம் ஒரு நாள், சில கைதிகளை முகாமிற்கு ஒரு பஸ்ஸில் கொண்டு வந்தனர். அவளின் தாய் குறிப்பிட்டார் "நான் என் மகளை பார்க்க நேராக பேருந்தை நோக்கி சென்றேன். என் மகள் இன்னும் உயிருடன் இருந்ததாக ஒரு இளம் பெண் எனக்கு ஒரு துண்டுத் தாளைக் கொடுத்தார்." அவளின் தாய் தேசிய மனித உரிமைகள் ஆணையம், பரணகம ஆணைக்குழு மற்றும் ஐ.சி.ஆர்.சி. ஆகியவற்றிற்கு புகார்கள் செய்துள்ளார். அவரது தாயார் ஜோசப் முகாமில் அவரது மகள் காணாமல் போனதாக அறிவித்தார். ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் ஒரு புகைப்படத்தை என்னிடம் காண்பித்து, இதுவா உங்கள் மகள் என்று கேட்டார். "நான் மிகவும் மகிழ்ந்தேன் , எங்கே அவள் என்று கேட்டேன்" பொலிஸ் அதிகாரி இப்போது அவரால் சொல்ல முடியாது என்றார், ஆயினும் மிகவிரைவில் என் மகளை பற்றிய தகவல்கள் அளிப்பதாக கூறினார். அதன் பின் அந்த தாய் ஜோசப் முகாமிற்க்கு தனது மகளை தேடி சென்றுள்ளர். சில காலத்தின்பின் அந்த பொலிஸ் அதிகாரி வேறு ஒரு இடத்துக்கு மாற்றம் செய்யபட்டார். என்னுடைய மகளை பற்றிய செய்தியை பெறும்வரை நான் போராட்டத்தை நிறுத்தமாட்டேன் என்று முல்லைத்தீவில் நடந்த போராட்டத்தில் கலந்தது கொண்டார். உண்மை, நீதி மற்றும் சீர்திருத்தம் : தமிழ் பெண்களின் போராட்டங்கள்











**இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு தெருக்களில் நூற்றுக்கணக்கான தமிழ் பெண்கள் தற்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக எதிர்ப்பு போரடங்களில் ஈடுபட்டுள்ளனர்**

சூடான சூரியன் மத்தியில், தெருக்களில் காணப்படும் மாசு மற்றும் தூசி என்பவற்றின் மத்தியிலும் ஒவ்வொரு நாளும் இந்த எதிர்ப்பு போராட்டத்தை தொடர்கின்றனர். இரவுகளில் கூட பலதரப்பட்ட சிரமங்களை பாராமல் போராட்டத்தில் ஈடுபடுகின்றனர்.[36]

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் விடயத்தில் இலங்கை அரசாங்கம் காட்டிய அக்கறையற்ற தன்மையினை மற்றும் இலங்கை அரசாங்கத்தின் இந்த மந்தமான போக்கினை கண்டு, சகித்துக்கொள்ளமுடியாத தமிழ் பெண்மணிகள், இரண்டாயிரத்து பதினேழாம் ஆண்டுகளின் உதயத்தில் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பிராந்தியங்களில் ஒரு வித புரட்சிகரமான எதிர்ப்பு போராட்டங்களை முன்னெடுத்தனர், ஆயினும் இந்த புரட்சிகரமான எதிர்ப்பு போராட்டம், ஒன்றுகூடலுக்கான சுதந்திரத்தினை தற்போது உள்ள அரசாங்கத்தின் கீழ் தமிழ் மக்கள் ஒரு சிறிய அளவில் அனுபவிக்கின்றனர் என்பதை உணர்த்தினாலும், இதுகூட எதிர் காலத்தில் முறியடிக்கப்பட்டக்கூடிய ஒரு சுதந்திரமாகவே உள்ளது. ஆயினும் இந்த முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு போராட்டங்களின் நோக்கங்களும் மற்றும் இலக்குகளும் தவறாக எடுத்துகொள்ள முடியாதவையாகும்: இந்த எதிர்ப்பு போராட்டங்களின் நோக்கமானது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர்க்கு என்ன நடந்தது மற்றும் அவர்களின் மரணத்துக்கு மற்றும் இன்னும் அவர்கள் காணாமல் இருபதற்கு பதில்கள் கிடைக்கபடவேண்டும் என்பதேயாகும். 2017 ஜனவரி 23 ஆம் திகதி வவுனியாவில் ஒன்பது தமிழ் பெண்களால் ஆரம்பிக்கப்பட்ட ஒரு உண்ணாவிரத எதிர்ப்பு போராட்டமே இந்த போராட்டத்தின் ஆரம்பமாகும்.[37] இதன்போது பாதுகாப்பு அமைச்சர் வருகைதந்தார், அவர் இந்த எதிர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டோருக்கு அரசாங்க உயர் அதிகாரி-களுடன் ஒரு சந்திப்பை வழங்குவதாக வாக்களித்திருந்தார், அதனால் அவர்கள் நான்கு நாட்களுக்கு பிறகு உண்ணாவிரதத்தை நிறுத்திவிட்டனர்.[38] ஆயினும், இந்த கூட்டம் எந்த உறுதியான முடிவுகளையும் ஏற்படுத்தவில்லை.[39]

2017 பிப்ரவரி 20 ஆம் திகதி, கிளிநொச்சியில் உள்ள தமிழ் பெண்களின் குழுவினர், அரசாங்கத்தின் கண்டும் காணாமல் இருக்கும் போக்கினை கண்டு சகிக்கமுடியாது தமது கோரிக்கைகளை நிறைவேற்றும் வரை தொடர்ந்தும் எதிர்ப்புப் போராடங்களை தொடர வேண்டும் என போராட்டங்களை முன்னேடுத்தார். எதிர்ப்புப் பங்கேற்பாளர்கள் 1200 மக்களுக்கு மேலாக மிக வேகமாக வளர்ந்து கொண்டுள்ளது. எதிர்ப்பு தளத்தில், ஒரு இந்து கோவிலின் வளாகத்தில், ஒவ்வொரு நாளும் 50 முதல் 200 பேர் கூடிவருகின்றனர், 20 முதல் 25 நபர்கள் இரவில் கூட தங்குகின்றனர். ஊள்ளுார் கடைகள் எதிர்ப்பு போராட்டத்திற்கு ஆதரவு வழங்கிவருகின்றனர்.[40] அவர்கள் இந்த போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு உணவு

---

[36] STP தொழிலாளி மூலம் மார்ச் / ஏப்ரல் 2017 ல் எதிர்ப்புக்கள் வருகை.

[37] Cf. https://www.nytimes.com/2017/01/26/world/asia/sri-lanka-hunger-strike-missing.html?_r=0 (10.08.2017).

[38] Cf. http://dailynews.lk/2017/01/27/local/105908/strike-relatives-missing-vavuniya-ends (13.08.2017).

[39] Cf. http://www.tamilguardian.com/content/families-missing-resume-vavuniya-hunger-strike (13.08.2017).

[40] கிளிநொச்சியில் ஆர்ப்பாட்டக்காரர்களுடன் உரையாடுகையில் 31. மார்ச் 2017.

மற்றும் தேவையான பொருட்களையும் வழங்கி வருகின்றனர். பிப்ரவரி 24 ம் திகதி, கிளிநொச்சியில் எதிர்ப்பு ஆரம்பித்து நான்கு நாட்களுக்கு பின்னர், வவுனியாவில் உள்ள பெண்கள் தமது போராட்டத்தை மீண்டும் ஆரம்பித்தனர், ஆனால் உண்ணாவிரதம் இல்லாமல். அதன் பின்னர், மார்ச் 8 ம் திகதி, வடக்கு முல்லைத்தீவில் உள்ள தமிழ் பெண்கள், மற்றும் கிழக்கில் திருகோணமலை உள்ள தமிழ் பெண்கள் அவர்களது ஆர்ப்பாட்டங்களை ஆரம்பித்தனர். ஏழு நாட்களுக்குப் பின்னர், மார்ச் 15 ம் திகதி, மருதங்கேணி, யாழ்ப்பாணக் குடாநாட்டில், நான்கு தமிழ்ப் பெண்கள் அரசாங்கத்தின் செயலற்ற நிலைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தினர். எதிர்ப்பின் முதல் நாளில் 23 பாதுகாப்பு அதிகாரிகள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பெண்களைப் பயமுறுத்தினர், அவர்களை அச்சுறுத்தி, புகைப்படம் எடுத்தனர். பாதுகாப்பு படைகளால் இந்த துன்புறுத்தலுக்கு ஆளாகியிருந்தாலும், பெண்கள் அடுத்த நாள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு திரும்பினர் மற்றும் அவர்களது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.[41]

மருதங்கேணி இடம்பெறும் போராட்டத்திற்கு உள்ள கண்காணிப்பு குறைந்தது என்றாலும், கண்காணிக்கும் பாதுகாப்பு பணியாளர்கள் முன்னிலையில் எல்லாவிதமான எதிர்ப்புபோராட்டகளும் மிகச் சிறப்பன முறையில் முன்னெடுத்துச் செல்லபடுகின்றது. எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கும்போது ஒரு STP உறுப்பினர் விஜயம் செய்த போது, அவரை அங்கிருந்த பலரும் புகைப்படம் எடுத்துக் கொண்டனர். புகைப்படம் பிடித்தவர்கள் STP உறுப்பினரால் கவனிக்கபடுவதை அறிந்து அவர்கள் அங்கிருத்து சென்றுவிட்டார்கள். “தமிழ் கார்டியன்” மருதங்கேணி ஆர்ப்பாட்ட இடத்திற்கு செல்லும் வழியில் இராணுவத் தளபதி, ஒரு தமிழ் பத்திரிகையாளரை நிறுத்தி, அவரை அச்சுறுத்தி, அங்கிருந்து திரும்பி செல்லும்மாறு மிரட்டியது தொடர்பான தகவல் ஒன்றை பதிவு செய்திருந்தார்.[42] 017 ஆகஸ்ட் 14 ஆம் திகதி, முல்லைத்தீவில் நடந்த ஆர்ப்பாட்டத்தின் தலைவர்களில் ஒருவரை, இரண்டு நபர்கள் கொலைசெய்தனர். இரண்டு இனம் தெரியாத நபர்களும் இணைந்து அந்த பெண்ணை அடித்து கொலை செய்துள்ளனர்.[43]

[41] STP தொழிலாளி மூலம் மார்ச் / ஏப்ரல் 2017 ல் எதிர்ப்புக்கள் வருகை.

[42] Cf. http://tamilguardian.com/content/tamil-journalist-harassed-sri-lankan-soldiers-en-route-disappearances-protest (09.08.2017).

[43] Cf. http://www.jdslanka.org/index.php/news-features/human-rights/702-tamil-woman-activist-campaigning-for-disappeared-threatened-with-death (16.08.2017).

## போராட்டக்காரர்கள் கோருவது

- யுத்தம் முடிந்த பின்னர் இலங்கை ஆயுதப் படைகளிடம் சரணடைந்த அல்லது இரணுவப்படையினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும், குறிப்பாக யுத்தத்தின் இறுதிக் கட்டங்களில்.[44]
- பாதுகாப்பு படைகளால் நடத்தப்படுகின்ற இரகசிய தடுப்பு மையங்களில் உள்ள அனைத்து கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும்.
- பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் அல்லது அவசர கட்டுப்பாடு ஒழுங்கு முறையின் கீழோ மற்றும் சட்டவிரோதமாக தடுப்பு முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டும்.
- முஆீ நியமனங்களை பாதிக்கப்பட்டவர்களின் சமூகங்களின் ஆலோசனை-யுடன் வழங்கபட வேண்டும். மரியாதைக்குரிய சுதந்திரமான மற்றும் நம்பகமான சர்வதேச நிபுணர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட சமூகங்களால் நம்பப்படும் காணாமல் போனவர்களின் குடும்பங்களின் பிரதிநிதிகள் நாட்டில் எந்த பிரதேசத்தில் வாழ்ந்தாலும் அவர்களே OMP நியமிக்கப்பட வேண்டும்.
- வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் எந்த பகுதியில் செறிவாக காணப்படுகின்றனரோ அங்கே OMP அமைக்கப்பட வேண்டும்.
- நடந்தேறிய வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்புடைய குற்றவா-ளிகளை தூண்டி விட்டவர்களை மற்றும் குற்றவாளிகளை OMP குற்றவா-ளிகளாக காட்டவேண்டும் மற்றும் இது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் உடன் தொடர்புடைய அனைவருடனும் நெருங்கிய தொடர்பை கொண்டிருக்க வேண்டும்.

2017 ஜூன் 12 ம் திகதி, ஜனாதிபதியும் சில வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்காக எதிர்ப்புப் போராட்டம் முன்னேடுக்கும் தலைவர்களை சந்தித்தார், அந்த வேளையில் எதிர்ப்பு ஆர்ப்பாட்த்திற்கான கோரிக்கைகள் அடங்கிய மனு அவரிடம் கையளிக்கபட்டது. இந்த சந்திப்பின் முடிவில், காலஅ-ளவில் வலிந்து காணாமல் ஆக்கபட்டோர் தொடர்பான மூன்று பட்டியல்களை பத்திரிகைகளில் வெளியிடு செய்வதற்கு இணக்கம் தெரிவித்தார். இவற்றுள் முதலாவது பட்டியல்லானது இறுதி யுத்தத்தின் முடிவில் யாரெல்லாம் சரணடைந்தர்களோ மற்றும் யாரெல்லாம் தடுப்புகாவலில் அடைத்து வைக்கப்பட்டு

[44] சரணடைந்தவர்களின் பெயர்களை முழுமையான பட்டியலிலும், இரகசிய காவலில் வைக்கப்பட்டிருந்த கைதிகளிலும், கைதிகளிலுள்ள அனைத்து கைதிகளிலும் கைதிகளால் எந்தவிதமான பட்டியலும் இல்லை என்று நிரூபிக்க முடியாது என்றாலும் இதே போன்ற பட்டியல்களின் இருப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை இராணுவத்தின் 58 வது பிரிவின் தலைவரான ஜெனரல் சனயகுணரட்ன, பிப்ரவரி 2016 ல் ஒரு விசாரணையில் சாட்சியமளித்தார், யுத்தத்தின் கடைசி மாதங்களில் முன்னணி சரணாலயத்தில் சரணடைந்த ஒவ்வொருவருக்கும் இராணுவம் ஆவணப்படுத்தியிருந்தது. (Cf. http://www.tamilguardian.com/content/sri-lankan-army-has-list-surrendering-tamils-%E2%80%93-brigadier (20.08.2017)).

உள்ளார்கள் என்பதை பற்றிய பெயர் பட்டியலாகும், இரண்டாவது பெயர் பட்டியல்லானது யாரெல்லாம் இரகசிய தடுப்புகாவல் நிலையங்களில் தடுத்து வைக்கபட்டிருப்பவர்கள் பற்றியது, மற்றும் மூன்றாவது பெயர்பட்டியல்லானது யா-ரெல்லாம் பயங்கரவாத தடை சட்டத்தின்கீழ் தடுத்துவைக்கப்பட்டு இருக்கின்றார்களோ அவர்களின் பெயர்பட்டியல் [the third about the detainees under the "Prevention of Terrorism Act" (PTA)].[45] ஆயினும் தற்பொழுது இரகசிய தடுப்பு மையங்களின் இருப்பை ஜனாதிபதி சிறிசேன நிராகரிக்கின்ற காரணத்தால்,[46] ஜனாதிபதி வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்காக எதிர்ப்பு போராட்டங்களை முன்னேடுக்கும் மற்றும் பாதிக்கபட்ட மக்களுக்கு அவர் அளித்த வாக்குறுதியை நிறைவு ஏற்றுவாரா என்பதில் பலசந்தேகங்கள் எழுந்துள்ளன. இருந்த போதிலும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்காக எதிர்ப்பு போராட்டங்களை முன்னேடுக்கும் மற்றும் பாதிக்கபட்ட மக்களுக்கு தங்களுடைய போராட்டங்களை தொடர்ந்தும் முன்னேடுத்து வருகின்றனர்.

[45] Cf. http://www.tamilguardian.com/content/president-sirisena-must-not-delay-upholding-his-promises-protesting-families-disappeared-any (08.08.2017).

[46] Cf. http://www.ft.lk/article/504035/ft (14.8.2017).

**முடிவுரை**

இலங்கை அரசாங்கமானது (GoSL) இன்றுவரை வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சனை தொடர்பில் தீர்வுகாண எடுத்த எந்தவொரு முயற்ச்சியிலும் தோல்வியினையே கண்டுள்ளது. இலங்கையில் உள்ள எல்லா ஆணைக்குழுக்களும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருடைய புகார்களையும் விசாரணை செய்வதற்கு இயலாது இருந்தது, அதே சமயம் சில வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருடைய புகார்கள் 1970களில் பதிவாகியது என தேதியிட்டது. பத்தாண்டுகளாக, ளுசை டுயமெய அரசாங்கமானது, சர்வதேச சமூகத்திற்கு வழங்கிய வாக்குறுதிகளை மீறி, பாதிக்கப்பட்ட சமூகங்களை புறக்கணித்துக்கொண்டே இருக்கிறது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருடைய பிரச்சினையை தீர்க்க அல்லது முடிவுகாண புதிதாக அமுல்படுத்தப்படும் OMP ஆணைக்குழுவே முயற்சி எடுக்க வேண்டும். இருந்த போதிலும், ஆகஸ்ட் 2016 ல் OMP இலங்கையில் நிறுவுவதற்கான மசோதாவை பாராளுமன்றத்தில் நிறைவேற்றினாலும், ஆகஸ்ட் 2017 வரை OMP நிறுவப்படவில்லை. அத்தோடு கூட அரச பிரதிநிதிகளின் கூற்றுக்களில் இருந்து தெரிவது என்னவென்றால் அரசாங்கத்திற்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் புகார்களை அக்கறைே-யாடு விசாரணை செய்வதற்கு விருப்பம் இல்லையென்பது தெட்டத்தெளிவா-கின்றது அவர்களை பொறுத்தவரையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் கருதப்படுவோர் யுத்தத்தின்போது இறந்தவர்கள் அல்லது வெளிநாடுகளில் வசிப்போர். ஆகையால், காணாமற் போனவர்களின் உறவினர்களின் உள்ளத்து வலி மிகவும் புரிந்துகொள்ளத்தக்கது. ஆகவே பாதைகளில் ஆர்ப்பாட்டம் செய்வதன் முக்கியதுவம் என்னவென்றால் இலங்கை அரசாங்கத்தின் மற்றும் சர்வதேச சமூகத்தின் கவனத்தினை ஈர்ப்பனவாகும். காணாமல்போன உறவுகளுக்காக எதிர்ப்பு போராடங்களில் ஈடுபட்டோர் இலங்கை அதிபரை சந்திக்க முடிந்தது, ஆயினும் இலங்கை அதிபர் ஏற்றுக்கொண்ட அந்த மூன்று பட்டியல்களை பத்திரிகைகளில் வெளியீடு செய்வதற்கான வாக்குறுதி இன்னமும் கருத்தில் கொள்ளப்படவில்லை. இலங்கை அரசாங்கமானது வழங்கிய வாக்குறுதி-களை இன்னமும் புறக்கணித்துகொண்டே உள்ளது. ஆயினும் தமிழ் பெண்கள் தங்கள் எதிர்ப்பு போராட்டங்களை தொடர்ந்து கொண்டேதான் உள்ளனர்.

## பரிந்துரைகள்

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக இலங்கை அரசாங்கத்தின் செயலற்ற தன்மையை கடந்த காலங்களில் கண்டுணர்ந்த STP நம்புகிறது மற்றும் வலியுறுத்துகிறது அவசர நடவடிக்கை ஒன்று தேவை என்று. எங்களுடைய பரிந்துரைகள் இலங்கை அரசாங்கத்துக்கும் மற்றும் சர்வதேச சமூகத்திற்கும் கூறிநிற்கிறது.

<u>இலங்கை அரசாங்கத்துக்கு :</u>

- வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர்காக எதிர்ப்பு போராட்டங்களில் ஈடுபடுகின்ற தலைவர்களுக்கு அளித்த மூன்று பட்டியல்களை பத்திரிகைக-ளில் வெளியீடு செய்வதற்கான வாக்குறுதியை வெகு விரைவாக நிறைவேற்றவேண்டும்.
- உடனடியாக OMP ஐ நிறுவம் வேண்டும்:
  OMP க்கான நியமனங்கள், பாதிக்கப்பட்ட சமூகங்களுடனும், மதிக்கப்படும், சுயாதீனமான மற்றும் நம்பகமான சர்வதேச நிபுணர்களுடனும், காணாமற்போன குடும்பங்களின் பிரதிநிதிகளிடமிருந்தும் தெரிவு செய்யப்பட்ட வேண்டும் மற்றும் OMP அமைப்பதற்கான இடத்தினை அதிகமாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் காணப்படும் இடத்தில் அமைக்க வேண்டும்.
- தேசிய சட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்படுவது ஒரு குற்றமாக கருதி சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.
- பாதிக்கப்பட்டவர்கள், காணாமற்போனோர் உறவினர்கள் உட்பட, முழுமையான மற்றும் பயனுள்ள இழப்பீடுகள் வழங்கப்படுகின்றன என்பதை உறுதி செய்ய வேண்டும்.
- வலிந்து காணாமல் ஆக்கப்படுவதற்கு காரணமானவர்கள் தண்டிக்க பட வேண்டும்.
- பயங்கரவாத தடுப்பு சட்டத்தை (PTA) நீக்கப்பட வேண்டும், அத்தோடு அதன்னுடைய அமுலாக்கத்தை முடிவிற்கு கொண்டுவர வேண்டும், அத்தோடு எதிர்கால சட்ட வரைபு சர்வதேச நிலைக்கு உயர்த்த வேண்டும்.
- பயங்கரவாத தடுப்பு சட்டத்தின்கீழ் (PTA) கைது செய்யப்பட்டவர்களை மற்றும் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.
- மனித உரிமைகள் கட்டமைப்போடு இணங்கி இலங்கை அரசாங்கமானது UNHRC தீர்மானத்தின் 30/1 ன் பரிந்துரைகளை நிறைவேற்றுவதோடு, இலங்கையில் பொறுப்புணர்வு மற்றும் மனித உரிமைகள் ஆகியவற்றை ஊக்குவிப்பதன் மூலம் மீள் உறுதிப்படுத்தல் வேண்டும்.

சர்வதேச சமூகதிற்கு:

- வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர்காக எதிர்ப்பு போராட்டங்களில் ஈடுபடுகின்ற தலைவர்களுக்கு செய்யப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற இலங்கை அரசாங்கம் உடனடியாக மூன்று பட்டியல்கள் வெளியிட சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும்.
- சர்வதேச சமூகம் உடனடியாக OMP ஐ இலங்கை அரசாங்கம் நிறுவ உதவ வேண்டும்:
- OMP க்கான நியமனங்கள், பாதிக்கப்பட்ட சமூகங்களுடனும், மதிக்கப்படும், சுயாதீனமான மற்றும் நம்பகமான சர்வதேச நிபுணர்களுடனும், காணாமற்போன குடும்பங்களின் பிரதி நிதிகளிடமிருந்தும் தெரிவு செய்யப்பட்ட வேண்டும் மற்றும் OMP அமைப்பதற்கான இடத்தினை அதிக-மாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் காணப்படும் இடத்தில் அமைக்க வேண்டும்.
- SriLanka அரசாங்கமானது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 30/1 தீர்மானத்தின் பரிந்துரைகளை நடை முறைப்படுத்துவதற்கும், நடை முறைப்படுத்துவதற்கும் மனித உரிமைகள் கட்டமைப்புடன் இணங்குகிறது. - எதிர்ப்பாளர்களின் கோரிக்கை நிறைவேறும் வரை ளுசடைுயமெயவுக்கு வர்த்தக சலுகைகளை வழங்காதீர்கள், SriLanka வின் மனித உரிமைகள் நிலைமை கணிசமாக முன்னேறியுள்ளது.